# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


நம் திருமறையைச் சேர்ந்த கத்தோலிக்க ஆசிரியர்கள் பாடங்களைத் திறமையாகப் போதித்தால் மட்டும் போதாது. இன்றைய இளைஞர்களிடையே இறையன்பும், ஒழுக்கமும், உழைப்பும், சேவையும், நல்ல பண்புகளும் அவர்களிடையே மலர, வளரச் செய்யவேண்டும்.

— ஒரு பேராயர்


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 39-ம் இல


# உலக ஆயர் "சினொட்டில்" இதுவரை நடைபெற்ற வரலாறு

புரட்டாசி மாதம் 30-ம் திகதி வத்திக்கானில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரினுல் ஆரம்பித்து வைத்த உலக மேற்றிராணிமார் யாவரினதும் பிரதிநிதித்துவம் ஒலிக்கும் சினொட் சபையானது இரண்டாம் வாரத்தில் பிதாப் பிதாக்கள், கருதினல்மார், மேற்றிராணிமார் பலர் இலத்தீன்பாஷையிலே ஆற்றிய பேருரைகளின்பின் பாஷை ரீதியில் பல கருமங்களையும் ஆலோசிக்கத் தொடங்கியிருக்கின்றது. ஞாயிறு தவிர்ந்த ஏனையநாட்களில், காலைப்பொழுதிலும் மாலைப்பொழுதிலும் நாளுக்கு 5½ மணித்தியாலங்கள் சபைகூடுகின்றது. குறிக்கப்பட்ட மூன்று அவைத்தலைவர்கள் சபையை நடத்துகின்றனர். பரிசுத்த தந்தை தனது ஆரம்ப உரையில் குறித்ததுபோலப் பேச்சுக்களை நேரில் கேட்க வசதியான நேரங்களில் எல்லாம் சபையில் வீற்றிருந்தார். சுகயீனம் முதலியனவற்றுல் வசதி ஏற்படாத நேரங்களில் தன் அறையிலிருக்கும் தொலைக்காட்சி மூலமாகச் சகல கருமங்களையும் பார்த்தும் கேட்டும் வருகின்ருர். இதுவரையும் குருத்துவத்தின் விரத்தத்துவம் மாத்திரம் பொருளாயிருந்ததாக உலகப் பத்திரிகைகள் மிகைபடக் கூறியிருப்பினும் அது முற்றிலும் உண்மையல்ல. வேறுபல கருமங்களைப்பற்றியும் மேற்றிராணிமார் உரையாற்றியிருக்கின்றனர். உலகத்தில் இன்று எதிர்பார்க்க வேண்டிய பல ஆபத்துக்களைப்பற்றியும் பலர் எடுத்துரைத்திருக்கின்றனர். குருமாரின் சேவைக்கு இன்றைய உலகில் விரத்தத்துவம் அவசியம் என்னும் கொள்கையைப் பெரும்பாலானேர் ஆதரித்துப் பேசியிருக்கின்றனர். தகுந்த அறிவும், ஒழுக்கமும், வயது முதிர்ச்சியுமடைந்த பொதுநிலை ஆண்மக்களுக்கும் குருத்துவப்பட்டம் அவசியம் ஏற்படின் அளிப்பது நன்று என்றும் சிலர் விவாதித்திருக்கின்றனர். ஆபிரிக்காக் கண்ட மேற்றிராணிமார்களும் ஆசியமேற்றிராணிமார்களும் விரத்தத்துவமுடைய குருத்துவத்துக்கு மறுசமயத்தவர்கள் மத்தியில் உள்ள மதிப்பை வற்புறுத்தியுள்ளனர். இம்மாத முடிவுவரையுமே சினொட் நடைபெறுமென எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் அவசியமேற்படின் மேலும் சில தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

## அரசாங்கமுன்னேற்ற திட்டங்களுக்கு சிலாப மேற்றிராணியாரின் ஆதரவு

"கரையோர மாகாணங்களில் வசித்துவரும் மீனவர்களின் பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றம் அளிக்கக்கூடிய திட்டங்களை நமது அரசாங்கம் தயாரித்து வருகின்றது. அத்திட்டங்களுக்கு எமது பகுதியிலுள்ள கத்தோலிக்கர் தமது முழுஆதரவையும் அளிப்பார்கள்" என்று எமது வாக்குறுதியை அளிக்கின்ருேம்என சிலாப மேற்றிராசன துணை ஆயர் மார்க்கஸ் பெர்ணுந்து அடிகளார் சென்றவாரம் அப்பகுதி மேற்றிராணியார் இல்லத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கூறியருளினர். அக்கூட்டத்தில் கத்தோலிக்க சமூகத்தின் பலதலைவர்களும், அப்பிரிவு ஐக்கியசங்க உயர் உத்தியோகஸ்தர்களும் சமுகம் அளித்திருந்தனர். கத்தோலிக்கரின் ஒத்துழைப்பு அத்திட்டங்களின்வெற்றிக்கு இன்றியமையாததென அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மதித்திருக்கின்றனர்.

## கேரள தேசத்தின் முன்மாதிரி

ரோமாபுரியில் நடைபெற்றுவரும் உலகஆயர் சினொட்டில் சென்றவாரம் இந்திய கருதினல் பாறெக்கற்றில் அடிகளார் குருத்துவத்தின் விரத்தத்துவத்தின் அவசியத்தை வற்புறுத்தி ஆற்றிய உரையில் இந்திய கேரள தேசம் பாரதநாட்டில் சேவை செய்யும் குருமாரின் தொகையில் நூற்றுக்கு அறுபதுவீதமாக அளித்து வருகின்றதெனவும், அப்பகுதியில் கத்தோலிக்க விசுவாசமே இதற்குக் காரணமெனவும் எடுத்துக் காட்டினர். கத்தோலிக்க குடும்பசிவியம், பெற்ருேரின் முன்மாதிரி, காளாந்த செபம், குடும்ப செபமாலைப் பக்தி, கத்தோலிக்கபாடசாலைகளில் ஊட்டப்படும் கல்வி முறை முதலியன இவ்விசுவாசத்துக்கு அடிப்படைகளாகும் எனவும், சந்நியாசமும், விரத்தத்துவமும் இப்பகுதியில் பெரும் மதிப்புப் பெறுகின்றதெனவும், இம்மதிப்பைக் குறைக்கத் தக்கதான முடிவுகள் செய்யப்படாதெனவும் கேட்டுக்கொண்டார்.

# யாழ் நகரில் பொன்விழா வைபவம்

மரியாயின் சேனையின் பொன்விழா நிகழ்ச்சிகளுள் ஒன்ருன "அப்போஸ்தலத்துவசேவைக்கு அழைத்தல்" பற்றிய ஒரு பொருட்காட்சி சம்பத்திரிசியார் கல்லூரியில் கடந்த 17ஆம் 18ஆம் திகதிகளில் நடைபெற்றது. துறவறத்தாரும் இல்லறத்தாரும் அப்போஸ்தலத்துவ சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதே இப் பொருட்காட்சியின் நோக்கமாகும்.

ஞாயிற்றுக்கிழமை காலை இறைவணக்கப் பாடலுடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இவ் வைபவத்திற் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து வந்திருந்த செனுத்துவ் தலைவர் திரு. கொட்வின் மென்டிஸ் மரியாயின் சேனை ஸ்தாபகரான பிறங்டவ்வின் படத்தைத் திரைநீக்கம் செய்தார். இதைத் தொடர்ந்து மகாவந். ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையவர்கள் வெக்சிலத்தை நாட்டிப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

இப் பொருட்காட்சியில் பங்குகொண்ட துறவற சபைகள்—திருக்குடும்பசபை, அப்போஸ்தலிக்க கார்மேல்சபை, திருச்சிலுவைக் கன்னியர் சபை, தேவபராமரிப்பின் கன்னியர்சபை, அமலமரி தியாகிகள், செபமாலைத் தாசர், திருமடச் சார்பற்ற சபைகள், மேற்றிராசனக் குருக்கள் என்பனவாகும்.

மரியாயின் சேனை ஐந்து பகுதிகளாக அமைக்கப்பட்டிருந்தது. இவை உலகிலும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## சினொட் ஆயர்களுக்கு பாப்பரசர் செய்த உபதேசம்

தற்போது வத்திக்கானில் நடைபெற்றுவரும் ஆயர் சினொட்டில் பங்குபெறும் 214 ஆயர்மாருடனும் கூட்டுப்பலி ஒப்புக்கொடுத்து பரிசுத்த தந்தை அவர்களுக்குச் செய்த உபதேசத்தின் முக்கிய பகுதிகளின் சாராம்சம் பின்வருமாறு:

● உங்கள் பேச்சுக்களில் தடையெதுவும் ஏற்படாதிருக்க நான் ஒன்றும் கூறுது, நீங்கள் சொல்வது யாவற்றையும் கேட்பவனுகவே இருப்பேன்.

● உங்கள் ஆலோசனைகளை பரஸ்பர நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும், தர்மசிந்தனையுடனும் நடத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

● திருச்சபையின் உண்மையான பாரம்பரியத்தையும், தற்கால தேவைகளுக்குத் திருச்சபைக்கு உகந்தனவற்றையும் அலசி ஆராய்ந்து பாருங்கள்.

● "பழங்கிடையன்" என்ற பழிச்சொல்லுக்கு அஞ்சாதும் புறஅழுக்கங்களுக்கு இடங்கொடாதும் கடமையைச் செய்யுங்கள்.

● குருமாரின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும், உலக நீதியுமே இச் சபையில் ஆராயப்படும் பிரதான விஷயங்களாகும்.

● திருச்சபையின் சரித்திரத்தில் கஷ்டமான இந்நிலையில் தூய ஆவியின் இரக்கத்தைக் கேட்டு உங்கள் வேலையில் இறங்குங்கள்.

### உறுதிப்பூசுதல் பெறும்வயது

புதியஉறுதிப்பூசுதல் திருச்சடங்கு அங்கீகாரம் பெற்ற தினத்துக்குமுன்னுள் திருச்சடங்குப் பரிபாலன பிரிவில் உயர் அதிகாரிகளில் ஒருவராகிய ஜோர்ஜஸ் மொட்டிமோட் அடிகளார் உறுதிப்பூசுதல் பெறுவோரின் வயதைக்குறிக்கும் பொறுப்பு தேசிய ஆயர்சபைக்கு ஒவ்வொரு தேசத்திலும் விடப்படும் எனக்கூறியிருக்கின்ருர். அத்துடன் உறுதிப் பூசுதலின்போது மேற்றிராணியார் கன்னத்தில்தட்டும் வழக்கத்தைப்பற்றியும் எடுத்துக்கூறியிருக்கின்ருர்.

### வட அயர்லாந்து தீவிரவாத கத்தோலிக்கரின் வன்செயல்களுக்கு ஆயர்மாரின் கண்டனம்

வடஅயர்லாந்திலுள்ள கத்தோலிக்கரில் ஒரு சிறுபான்மையினர், தீவிரவாதிகளாக வன்செய்கை முறைகளினுல் அயர்லாந்து தேசத்தை ஒன்றுபட்ட அயர்லாந்தாகச் செய்ய எத்தனித்துச் செயலாற்றி வருவதைக் கண்டிக்க அப்பிரிவுக் கத். மேற்றிராணிமார்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுவிருபம்ஒன்றை வடஅயர்லாந்து மக்களுக்கு வரைந்திருக்கின்றனர். "வட அயர்லாந்திலுள்ள ஒரு கோடி புரொட்டஸ்தாந்து மக்களைக் குண்டுகளினுல் பலியெடுத்து ஒற்றுமைப்பட்ட அயர்லாந்தை உருவாக்கலாம் என்று எண்ணுபவர்கள் பைத்தியம் பிடித்தவர்கள்" என்று அக் கூட்டுவிருபம் அறிவிக்கிறது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# செய்திகள்

## பிரதமரின் அமெரிக்க விஜயம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்து உரையாற்றுமாறு பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா சென்ற 10ஆம் திகதி விமான மூலம் நியூயோர்க் நகர் சென்றிருக்கின்றார். அவர் மகன் அனுரா பண்டாரநாயக்காவும் தனது படிப்பைத் தொடர்ந்து படிப்பதற்காக அதேவிமானத்தில் லண்டன் நகர் சென்றுள்ளார். பிரதமர் திரும்புகிறவரையிலே நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரியும் சபைமுதல்வருமான திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா பதில் அரசாங்க தலைவராக நியமனம்பெற்றுக் கடமையாற்றி வருகின்றார்.

## இலவசமாக இனியில்லை

அரசாங்க திணைக்களங்கள், மந்திரிமார்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள், பொலிஸ் ஆயுதப் படையினருக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த இலவச தபால், தந்தி, தொலைபேசிச் சேவைகள் அடுத்தவருட முதல் நிறுத்தப்படவிருக்கின்றன.

## அடுத்தவருட கல்விச் செலவு

நாட்டின் கல்வித் தேவைக்கென்று அடுத்த வருடத்திலே 65கோடி ரூபாவை ஒதுக்க அரசாங்கம் எண்ணியிருக்கிறதென்று உதவிக் கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார். சகல அரசாங்கங்களும் நாட்டின் கல்விக்கு ஏராளமான பணத்தைச் செலவிட்டபோதிலும் சிறந்த முன்னேற்றத்தைக் காணவில்லையென்றும் அவர் முறைப்படுகின்றார்.

## 200 இந்திய பஸ்கள்

தற்போதுள்ள நிலைமையில் பிரயாணிகளுக்குப் போதிய வசதிகளை அளிக்கமுடியாதிருப்பதாலே இந்தியாவிலிருந்து உடனடியாக 200பஸ்களை இறக்குமதிசெய்ய இலங்கைப் போக்குவரத்துச்சபை தீர்மானித்திருக்கிறது. இதற்குப் பத்துலட்சம் ரூபாவரை தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிரியர் இடமாற்றம்

வருகிற தைமாதம் 1ஆம் திகதியிலிருந்து 15,000 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றார்கள். இவர்களிலே கஷ்டமான பகுதிகளில் கூடியகாலம் சேவையாற்றியவர்களுக்கும், திருமணமானவர்களுக்கும் முக்கிய இடம் அளிப்பதெனக் கல்வி மந்திரி முடிவு செய்திருக்கின்றார்.

## பரந்தன் தொழிற்சாலை

பரந்தன் இரசாயனதொழிற்சாலை சமீபத்தில் கல்சியம குளோறைட் உற்பத்தி செய்யத்தொடங்கியுள்ளது. இது குளிரூட்டும வேலைகளுக்கு உதவுகின்றது. மேலும் அதிலே கோஸ்ரிக் சோடா, குளோறின் ஆகியவற்றைக் கூடுதலாக உற்பத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## இருகாரணங்கள்

ஒரு மாணவனின் பெற்றார் இடமாற்றம் செய்யப்படுதல், அல்லது ஒரு மாணவன் படிப்பதற்கான அடுத்த வகுப்பு அப்பாடசாலையில் இல்லாதிருத்தல் ஆகிய இரு காரணங்களுமில்லாத வேறெந்தக் காரணத்தை முன்னிட்டும் பாடசாலையில் புதிதாகச் சேர அனுப்பப்படும் எந்த விண்ணப்பத்தையும் ஏற்கப்படாதென்று கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்திருக்கிறது.

## கமிஷன்களும் கமிற்றிகளும்

அரசாங்கம் இனிமேல் அத்தியாவசியமான காரியமென்று கண்டாலன்றி மற்றப்படி கண்டகண்ட கருமங்கள் பற்றியெல்லாம் ஆராய்வதற்கென விசாரணைக் கமிஷன்கள், கமிற்றிகளை அனுவசியமாக நியமிப்பதில்லையென்று திட்டவட்டமாக முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

## புதிய புடவைக் கூப்பன்

அடுத்த நத்தால் பண்டிகையை முன்னிட்டுப் புதிய புடவைக்கூப்பன் ஒன்றை வருகிற கார்த்திகை 1ஆம் திகதியிலிருந்து செல்லுபடி ஆக்குவதற்கு வர்த்தக அமைச்சு தீர்மானித்திருக்கிறது. இதன் பொருட்டு மேலதிகமாக இரண்டுகோடி யார்ப் புடவைகள் நாடுமுழுவதிலும் வழங்க முடிவாயிருக்கிறது.

## இலங்கைக் குடிசனம்

குடிசன மதிப்புக் கணக்கின்படி இலங்கையின் குடிசனத்தொகை 12,747,755. இற்றைக்கு 8 வருடங்களுக்குமுன் அதாவது 1963-ம் ஆண்டிலே அதன் குடிசனமதிப்பு 1கோடியே 5லட்சத்து 80ஆயிரம் போரகும்.

## ஒரே குடும்பத்தில் மூவர்

குடும்பக் காணித் தகாறு ஒன்றையிட்டு ஒரு கணவனையும், மனைவியையும கொன்று இரட்டைக்கொலை செய்தார்களென்று குற்றஞ்சாட்டி மாத்தறைச் சுப்பிறீம்கோட்டிலே ஒரு தகப்பன், தாய், இரு புதல்வர், ஒரு புதல்வியாகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர்பேரில் தொடரப்பட்டிருந்த வழக்கு ஆறுதினங்களாக விசாரணை செய்யப்பெற்று முதல்மூன்று எதிரிகளும் கொலைக்குற்றவாளிகளாகி மரணதண்டனைக்குள்ளாக, மற்றிருவரும் விடுதலையடைந்தார்கள்.

## 55 வயதில் இளைப்பாறினோர்

அரசாங்க ஊழியர்கள் 55 வயதில் இளைப்பாற வேண்டுமென்ற பிரமாணத்தை முன்னிட்டு இளைப்பாறியவர்களுக்குத் தேவைப்படும் பணம் 1கோடியே 62லட்சத்து 50 ஆயிரம் ரூபா. இதற்கெனப் பொதுநிர்வாக மந்திரி சனப்பிரதிநிதிகள் சபையில் ஓர் உபமானியப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கின்றார்.

## வைத்திய நற்சாட்சிப் பத்திரம்

வைத்திய அத்தாட்சிப்பத்திரம் வழங்குவதற்காகக் கட்டணம் அறவிடும் பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்கள்மீது ஆயுள்வேதவைத்தியசபை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. நோயாளரைப் பரிசோதனை செய்வதற்கும், மருந்து கொடுப்பதற்கும மட்டுமே கட்டணம் அறவிடலாம். மற்றப்படி வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொடுப்பதற்கு மட்டும் கட்டணம் அறவிடுவது கண்டிப்பாக விலக்கப்பட்டுள்ளது

## மாதிரி அத்தாட்சிப் பத்திரம்

ஆயுள்வேத வைத்தியர்கள் இனிமேல் ஆயுள்வேத வைத்தியசபையால் விதிக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்திலேயே வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வழங்கவேண்டும். இத்தப்பத்திரம் வைத்திய சபையின் முத்திரை பதிக்கப்பட்ட பத்திரத்திலேயே வழங்கப்படவேண்டும். வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பெற்ற நோயாளியின் முழு விபரங்களும் நோயாளரின் பதிவு இடாப்பு ஒன்றில் எழுதிப் பாதுகாத்து வைக்கப்படவேண்டும்.

## வெங்காயம், மிளகாய் விலை

ஈரவெங்காயம், செத்தல் மிளகாய் ஆகியவற்றின் உத்தரவாதவிலைகள் மேலும் உயர்த்தப்படவிருக்கின்றன. இவைகளைச் செய்கைபண்ணும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் முகமாகவே அவற்றின் உத்தரவாதவிலை உயர்த்தப்படவிருக்கிறது. ஆனால், எவ்வளவாக உயர்த்துவது என்பது இன்னுமே நிர்ணயிக்கப்படவில்லை.

## ஜி. சி. ஈ. பரீட்சை

வருகிற மார்கழிமாதம் 15ஆம திகதி ஆரம்பமாகி எட்டுத் தினங்களில் முடிவடையவிருக்கும் க. பொ. த. (ஜி. சி. ஈ.) சாதாரண பரீட்சைக்கு 3லட்சத்து 50ஆயிரம் மாணவர்கள் தோற்றவிருக்கிறார்கள். இப்பரீட்சையிலே கணிதம், பொருளாதாரம், சித்திரம், சிங்கள இலக்கியம், மனையியல், தையல், பொறியியல் வரைதல் ஆகிய எட்டுப் பாடங்களிலே ஒவ்வொன்றுக்கும் இரண்டு வினுப்பத்திரங்கள் வழங்கப்படும். இவற்றிலே ஒவ்வொரு பாடத்திற்கும் ஏதாவது ஒன்றைத் தெரிந்து அதற்கு மாணவர்கள் விடைகெழுதவேண்டும்.

## நவீன சந்தைக் கடைகள்

யாழ்ப்பாண மாநகரசபையால் நிர்மாணிக்கப்பட்டுவரும் நவீனசந்தைக் கடைகளை வாடகைக்கு வழங்கப் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதென்றும், கடைகளுக்கான மாதவாடகைப்பணத்தை நிர்ணயிப்பதென்றும் சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## பதினுலரைக் கோடிரூபா

அவசரகால நிலைமையை முன்னிட்டுப் பொலிஸ்படை உட்பட முப்படைகளும் ஆற்றியசேவைகளுக்கென இவ்வருடம் பதினுலரைக் கோடி ரூபா கூடுதலாகச் செலவாகவிருக்கிறது. இதில் இராணுவத்துக்கு 6கோடியே 50லட்சம் ரூபா, விமானப்படைக்கு 4கோடியே 40லட்சம் ரூபா, பொலிஸ்படைக்கு 3கோடி ரூபா, கடற்படைக்கு 30லட்சம்ரூபா. இதற்கான உபமானியப் பிரேரணை ஒன்று சனப்பிரதிநிதிகள் சபையிலே சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## சனரோஜன் விலை உயர்ந்தது

சனரோஜன் விலையை உடனடியாக உயர்த்த வேண்டுமென்று வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது. அதனுல் 9 ரூபா 82 சதமாக விலைப்பட்டுவந்த சனரோஜன் போத்தல் இப்போது 12 ரூபா 65 சதமாகவும், 11 ரூபா 88 சதமாக விலைப்பட்டுவந்த போகதல் இப்போது 13 ரூபா 76 சதமாகவும் விலை உயர்ந்திருக்கிறது.

## மாணவர்களின் மதிய உணவு

நாடு முழுவதிலுமுள்ள 32 லட்சத்து 50ஆயிரம பாடசாலைப் பிள்ளைகளுக்கும் மிகவும் ஆரோக்கியம்தரும் மதிய உணவை அடுத்தவருட முதல்வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்திருக்கிறது. தற்போது அவர்களுக்குக் கொடுபட்டுவரும் பிஸ்கோத், பாலுக்குப்பதில் பச்சைசப்பயறு, மற்றும் பயறுவகை, மீன் ரோள் ஆகியன கொடுபடும். இது விஷயமாய் வெளிநாட்டு உதவி ஏஜென்சிகளுடனும். மீன்பிடி கூட்டுத் தாபனத்துடனும் ஆலோசனை நடைபெறவிருக்கிறது.

## நெல்லின் உத்தரவாதவிலை

உத்தரவாத விலைத்திட்டத்தின்கிழ் இப்பொழுது ஒரு புசல் நெல்லின்விலை 14ரூபாவாகும். இதனைப் 15ரூபாவாக உயர்த்துவதுபற்றி விவசாய அமைச்சு ஆலோசனை செய்கிறது. ஆனுல், மேலதிகமாக வழங்கப்படும ஒரு ரூபாவையும் நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுப்பதற்குப் பதில் அது ஆரம்பிக்கவிருக்கும் ஒரு விசேட நிதியிலே அவர்கள் பெயரில் அதனைச் சேமித்துவைப்பதுபற்றி ஆலோசிக்கப்படுகிறது. இவ்விதம் ஒவ்வொரு போகத்திலும் மூன்று கோடிரூபாவை சேகரித்துவைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## புளிய மரங்கள்

நாட்டுக்குப் போதிய புளியை உற்பத்திசெய்ய வனபரிபாலன திணைக்களம் புளிய மரங்களைப் பெருந்தொகையாகப் பயிரிடத் தீர்மானித்துள்ளது. மரநாட்டும் திட்டத்தின்கீழ் இப்பொழுது காட்டுப் பகுதிகளில் வருடம் ஒன்றுக்கு முப்பது ஏக்கரில் புளியமரம் நாட்டப்பட்டு வருகிறது. மேலும் நாட்டின் பெருவீதியோரங்களிலே புளியமரங்களை நாட்டுவதற்கும் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

## மறைக்கல்விக் குழாம்

இம்மாதம் 23, 24ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) அடைக்கலமாதா (O. L. R) ஆலயத்தில் இளைஞருக்கான ஒரு மறைக்கல்விக் குழாம் நடைபெறும். யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம்இவைகளில் கல்வி பயிலும் கத்தோலிக்க இளைஞர்கள் குறிப்பாக இம் மறைக்கல்விக் குழாமில் கலந்துகொள்ளுவார்கள்.

நேரம்: 23-10-71 சனி பி. ப. 2-30 மணிக்கு ஆரம்பம்.
24-10-71 ஞாயிறு காலை 8-30 மணிக்கு ஆரம்பம்.

பங்கு கொள்ளுங்கள்;
பயன் பெறுங்கள்.

யாழ் மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

---

✠

## முதல் வருட மரண ஞாபகம்

"ஜீவியத்தில் நேசித்தவர்களே மரணத்தில் மறவாதீர்,"

1970ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ஆம் திகதி இறைவன் தம்மிடம் அழைத்துக்கொண்ட இறை அடியாளாகிய அருளானந்தம் மங்கிறீஞ்ஞ திரேசம்மாள் குருஸ் என்பவளை நினைவு கூருவோமாக.

இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக இம்மாதம் 27ஆம் திகதி பேசாலை, புனித வெற்றிநாயகி ஆலயத்தில் திருக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் அனைவரையும் இவளின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ள பணிவுடன் வேண்டுகிறோம்.

பிரிவினுல் துயருறும்,
தாயார், கணவர், மக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்,

பேசாலை.

---

✠

### ஆனந்தம் டயஸ் பவுலின் பல்தானுவின்

## 3ஆம் வருட மரண ஞாபகம்

இவளுடைய 3ஆம்வருட மரண நினைவுதினமாகிய இம்மாதம் 26ஆம் திகதி காலை 6 மணியளவில் பேசாலை, புனித வெற்றிநாயகி ஆலயத்தில் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படவிருக்கிறது. இதிற் பங்கு கொடுக்க உறவினர் நேசிதர் அனைவரையும் பணிவுடன் அழைக்கிறோம்.

ஆண்டவரே, உமது அடியாளாகிய இவளின் மேல் நித்திய ஒளி ஒளிர்வதாக; சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

பிரிவினுல் துயருறும்,
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பேசாலை.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

புனித யூதாததேயுவின் மன்றாட்டினுல் எனது வியாதி நீங்கி சுகமடைந்தேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். காலதாமதத்திற்கு மன்னிப்புக்கோருகிறேன்.

நெடுந்தீவு. —ஓர் அடியாள்

ஆசிரியருக்குக் கடிதங்கள் :

# "சென்று வாருங்கள் பூசை முடிந்தது"

## I

கல்வாரிப்பலி பலிபீடத்தில் நடந்துமுடிந்த போதிலும், நமது வாழ்வையும் இதே பலியாக்கிக் கொள்ள வேண்டியதாக இருப்பது மேற்கூறிய பலியே. கல்வாரிப் பலியிலிருந்து வேண்டிய அருளைப் பெற்று, நமது வாழ்வைப் பலியாக்கிக் கொள்வதிலும், நமதுவாழ்வு முடிவுறும்போது கல்வாரிப்பலியை முடித்துக் கொள்வதிலும் இக்கருத்து அடங்கும்.

ஆகவே, "சென்று வாருங்கள் பூசை முடிந்தது" என்று கூறுவது மேற்கூறிய கருத்திலில்தான் அடங்கும்.

தினமும் நமது வாழ்வின் பலியைப் புனிதமாக்கும் பொருட்டு, குருவானவர் பலிபீடத்தில் பலியை நிறைவேற்றி அதை முடிக்கவேண்டியவராயிருக்கிறார். பிரதான அம்சம் முடிந்தது என்பதுதான் இதன் பொருள்.

எவ். ஏ. குருஸ்,
நாரைட்டான்.

## II

இந்த அனுப்புதல் வார்த்தைகள் லத்தீன் வார்த்தையின் தமிழ் மாபுக்கியைந்த மொழிபெயர்ப்புஎன்று தயங்காது கூறலாம். எனவே, அதிற் பிழையில்லை என்பது நிசம். எனினும், அதன் பொருளை இன்னும் விளக்கமாக வெளியிடத் தமிழிலே வளமான மொழியுண்டு. அதைப் பாவியாது விடுவது பரிதாபத்துக்குரியது.

ஆண்டவன் திருச்சபையில் இலவசமாக அளிக்கும் நன்மைகளை நிறைய அள்ளித் தெளியாது சொற்பமாகக் கிள்ளி அளிப்பதுதான் எம்மிடையே பழக்கமாகி விட்டது. பேச்சுப் பிரதானமாயினும் பொருள் பொள்ளலாவது வழப்பம். உள்ள பொருளை முழுவதும் சொல்லிலே அடக்கிவிட முடியாதென்பது மெய். ஏனெனில், அது கருத்தைக் காட்டும் அடையாளம் மட்டும்தான். எனவே அதைக் கொண்டு நாம் தொடர்பான பல காரியங்களையும் மனக்கண் முன்னே கொண்டுவர முடியும், வேண்டும்.

திருச்சபை பலிபூசைவேளையிலே தனது பிள்ளைகளுக்கு ஆன்ம வாழ்வுக்கு அவசியமான உணவு அளிக்கின்றது. போதகம், பலி, பிரசாதம் இவை மூன்றும் கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதவை. கரிசனையோடுவந்து பங்கெடுப்பவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்கிறார்கள். உலகிலேபோய் ஞானப் போர் நடத்தத் தயாராகிறார்கள். வீரத்தாய் தன் மகனைப் போருக்கனுப்ப அமர்க்களத்துயிர் நீத்த தந்தையின் கவசம் கலன்களை அவனுக்கணிவித்து, "போய்வா மகனே போய்வா; கரிசரித்து, வெற்றிபெற்று, வாகை சூடிவா" என்று அனுப்பியதுபோல எமது தாய்த் திருச்சபை எங்களைப் பிரபஞ்சப்போருக்கு அனுப்புகிறாள்.

தலைவன், கிறிஸ்துவின்போதகம், பலி, பிரசாதம் பெற்ற பின் நாங்கள் அவரைப்போல உலகிலே வாழப்போகின்றோம். சென்று வாழுங்கள் கிறிஸ்தவர்களாக. அதற்கு வேண்டிய போசனம் (யுத்த ஆயுதங்கள்) உங்கள்வசம் தந்தோம். சமராடியபின் அடுத்த ஞாயிறு திரும்பி வாருங்கள்; வருகிற கிழமைக்கு வேண்டிய ஆயத்தங்களை அடைவதற்கு, அணிவதற்கு. போவதும் வருவதும் கவனிப்பதா திருச்சபையின் முதல் வேலை? கிறிஸ்து வந்தது மனிதர் வாழ்வுபெற; அதுவும் நிறைவான வாழ்வுபெற. எமது வாழ்வு எம்மை நித்திய சீவியத்துக்குத்தயார்செய்யும் வாழ்வு. இதுதான் திருச்சபையின் வேலை.

பலிஎன்றவுடனேபயம்வருவது இயற்கை. அது அழிவு, நோவுஎன்பதால் ஏற்படுவது. பலி என்பது ஒரு பொருள், கடவுளுக்குச் சொந்தம் என்று ஒப்புக்கொள்வது. அதன் அத்தாட்சியாக அப்பொருளைக் கொன்றோ, சமைத்தோ, புசித்தோ அழிவு செய்யும் போதுதான் நோவு ஏற்படுகிறது. எமது வாழ்வு கிறிஸ்துவின் பலிபோலே. அவர் வேறெந்த மனிதனும் படாத பாடுகள் பட்டார். ஆனால், வேறெவரும் அனுபவியாத இன்பத்தோடு பாடுபட்டார். இது மர்மமாயிருக்கலாம்; ஆனால் உண்மை. அதுதான் எமக்கு மாதிரி, இலட்சியம்.

லத்தினிலே Ite Missa Est என்றஒரு வாக்கியம்மாத்திரமே தோன்றுகிறது. ஆனால் சுதேசமொழிபெயர்ப்புகளிலோ பல வாக்கியங்களைக் காண்கின்றோம். தேவனை நேசித்துச் சேவிக்கச் சமாதானமாய்ச் சென்று வாருங்கள் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். வாழ்க்கை கடவுளை நேசிக்க; அதாவது, நான்கடவுளுடைய சொந்தப்பொருள் என்ற உணர்ச்சி, தன்னை அவருக்கு எல்லாவற்றிலும் கையளிக்கும் மனப்பான்மை. அவரைச் சேவிக்க என்பது தேவனை மேலே, முதலிடத்திலே உயர்த்திப்போற்ற முயலும் ஆவல். அதனால் நாம் கடவுளின் உண்மையிலும் நன்மையிலும் ஊன்றிவளர்கின்றோம். கிறிஸ்துவின் அளவுக்கு நாமும் வளரவேண்டும். இந்த இலட்சியத்துக்காகத்தான் திருச்சபை வருந்தி உழைக்கின்றது.

சருவேசுரனுக்கு நன்றி என்று நாங்கள் கூறுகிறோம், இறைவன் பித்தர் இந்தச் சொல்லை விட்டுவைத்தது விந்தைதான். சொல் அல்லப் பொருளே எமக்குப் பிரதானம். என்னத்துக்கு நன்றி? விருந்துக்குப் போனால் வயிறார உண்ணவேண்டும். அப்போதுதான் நாம் நன்றி என்று நிறைவாகச் சொல்லலாம். அதைவிட்டுப் பிரதாபமுதலியார்போல வெளியேகின்று நறுமணத்தை மாத்திரம் நுகர்ந்துபோட்டு வழக்கிலே அகப்படுவது அல்லவா எங்கள் பழக்கம்.

நன்றி. கிறிஸ்துவின் போதகத்தைப் படித்து விளங்கிக் கொண்டேன்; கிறிஸ்துவோடு என்னைக் கடவுளுக்குச் சொந்தமாகக் கொடுத்தேன்; கிறிஸ்துவைப் புசித்து அவரோடு ஒன்றித்து விட்டேன். இனி இந்தநாள் முழுவதும், இந்த வாரம் முற்றாக இந்த நன்றி எனது வாழ்க்கையிலே ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். இதுதான் கிறிஸ்தவனின் சந்தோஷத்துக்குக் காரணம்.

எனவே, குருவானவர் உரைக்கிறார்: வாழ்க்கை முஸ்திப்புகள் எல்லாம் முடிந்தது; இனிச் சென்று வாருங்கள்; திரும்பி வாருங்கள். நாங்கள் சொல்வது: இவற்றைத் தந்த சர்வேசுரனுக்கு நன்றி; சென்று கிறிஸ்துவாய் வாழ்கின்றோம்; கணக்கை ஒப்பிக்க மீண்டும் வருகின்றோம். கிறிஸ்தவனின் சீவியம் முழுவதும் அவன் தேவனுக்களிக்கும் ஒரு தோத்திரப்பலி. பலிப்பூசைவேளையில் அவன் தன்னை அதற்குத் தயார் செய்கின்றான்.

ஒரு வாசகன்

## III

இறைமகன் கிறிஸ்துதமது பரலோக தந்தையின் மட்டில் கொண்டிருந்த சிநேகத்தினால் பிதாவின் சினத்தைத் தணிக்கும் பலியாகவும், மனுக்குலத்தின் மட்டில் தாம கொண்டிருந்த அன்பினால் அவர்களின் மீட்பின் பலியாகவும், கல்வாரி மலையின் உச்சியில் தாமே பலிப்பொருளும் குருவுமாக நின்று செங்குருதி நிலத்தில் தோயத் தம்மைத்தாமே பிதாவிற்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். உலகம் உள்ளவரைக்கும் அந்தப்பலி தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும் என்பதே அவருடைய தணியாத வாஞ்சையாக இருந்தது என்பதைப் பெரிய வியாழக்கிழமை பாஸ்கா விருந்தின் பொழுது அவர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு இட்ட, "இது என் சரீரம்! இது என் இரத்தம்! இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்னும் அன்புக் கட்டளையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆகையால் எங்களின் திருப்பீடங்களில் நாள்தோறும் நிறைவேற்றப்பட்டு வரும் பூசைப் பலியானது கல்வாரிச் சிலுவைப்பலியின் 'நினைவுப் பலி'யேயாகும். இந்தப்பலியின் முடிவில்தான் குருவானவர் மக்களைப்பார்த்து, "சென்று வாருங்கள் பூசை முடிந்தது" என்று அன்பொழுக ஆசிகூறி மக்களுக்குப் பிரியாவிடை கொடுக்கிறார். இந்த வாக்கியத்தில் பிழைபிடிப்பதற்கு இடமேயில்லை. இதுஓர் அழகான பண்பாடுநிறைந்த இறுதிச் சடங்காகவே விளங்குகின்றது. இந்தச் சடங்கு முடிந்ததும் நாங்கள் எழுந்து நின்று :

முடிந்தது கல்வாரிச் சிலு
வைப்பலி — தினம்
தொடர்ந்தது பீடத்தில்
நினைவுப் பலி
முடிந்தது அந்தப் பூசைப்
பலி— இனி
தொடங்குவது நம் வாழ்க்
கைப் பலி
உள்ளம் என்னும் ஆலயத்
தில் உறைந்திடும் உன்னத
இறைவனுக்கு
இன்பமும்துன்பமும் கலந்து
வரும்—நம்
வாழ்வைப்பலியாய் அளித்
திடுவோம்.

என்று பாடுகிறோம்.

எங்களின் வாழ்க்கைப்பலி இனித் தொடங்கப் போகிறது. சுக துக்கம் சுழல் சக்கரம் என்று நிரூபிக்கப் போகும் இன்றையநாளின் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் எங்களின் ஆன்மாவில் வசிப்பவராகிய தேவனுக்கு அன்புப்பலியாக நன்மனதோடு ஒப்புக்கொடுப்போமாக என்று அல்லவா இந்தப்பாட்டு எங்களுக்குச் சொல்லித் தருகின்றது. இதை நாம் சிந்திப்பதில்லை; சிந்தித்தால் கடவுளை எங்களுக்கு வெளியே தேடிச் சலிப்படைந்தவர்களாக,

"மனிதன் மாநிலத்தில்
மடிகிறானே ;
ஆண்டவன் ஆகாயமதில்
தூங்குகிறானே"

என்று பாடுவோமா? இல்லை.

செல்வி
ரோசலின் சூசைப்பிள்ளை,
இளவாலை.

## IV

2-10-71இல் வெளிவந்த பாதுகாவலனில் இராமலிங்கம் அவர்கள் சென்றுவாருங்கள் பூசை முடிந்தது என்று குருமார் பூசைமுடிவில் கூறுவது சரியாஎனக் கேட்டிருந்தார்.

சரி; ஏனெனில், சென்று வாருங்கள் பூசை முடிந்தது என்று கூறும்போது அதிலுள்ள பூசைஎன்ற சொல் கிறீஸ்து இரத்தம்சிந்திச் செய்த பலியை இரத்தம் சிந்தாத வகையில் நிறைவேற்றுகின்ற பூசைப்பலியைக் குறிப்பதாகும், எமது வாழ்க்கைப்பலியைக் குறிப்பதில்லை. ஆனால் சில குருமார் பூசைமுடிவில் "கிறீஸ்துவின் சமாதானத்தில் சென்று வாருங்கள்" என்றே கூறுகின்றனர்.

மேவின் கொன்ஸ்ரன்ரைன்
ஊர்காவற்றுறை.

எண் (1)

# துணிந்த மனிதன்

கடல் நடுவிலே படகு. படகினுள்ளே சீடர்கள். இரவு நேரம் இருளில் ஏதோ தெரிகின்றது. அது பேயோ பூதமோ புரியவில்லை. காற்று பலமாக வீசுகின்றது. படகு அங்குமிங்குமாக ஆடுகின்றது. தொலைவில் தோன்றிய உருவம் நடந்துவருகின்றது —தரையில் அல்ல தண்ணீரிலே. தயங்கி நடுங்கினர் சீடர்கள். அலறி அழுதனர். "அஞ்சாதிர்" என்ற குரல் அலைபோல அவர்கள் காதில் வந்து விழுந்தது. அது ஆண்டவர்தான் என்பதை அறிந்து அவர்கள் ஆறுதலடைந்தனர்.

நீந்துவதில் வீரன் இராயப்பர். ஆனால் ஆண்டவர் நீந்தவில்லை, நடக்கின்றார். தானும் நடக்கவேண்டுமென்று ஆசிக்கிறார். தண்ணீரில் நடப்பதென்றால் எவருக்குமே ஆனந்தம். ஆனால் அலைகள் வந்து அவரை மோதின. தலையை மூடின. அவர் மூழ்கும்நேரம் மூச்சும் இல்லை. அச்சம் மிகுந்து ஆண்டவரை அழைத்தார், காப்பாற்ற வேண்டினார். கை கொடுத்தார் ஆண்டவர். உயிர் தப்பினார் இராயப்பர். காற்று ஓய்ந்தது. கடல் அடங்கியது. அவர் உடலிலும் உள்ளத்திலும் அமைதி பரவியது. மீண்டும் விசுவாசம் பிறந்தது.

நாமும் வாழ்க்கை என்ற படகிலே பயணம்செய்து கொண்டிருக்கிறோம். நாம் பயணம் செய்யும் பாதை அலைநிறைந்த அல்லது கொந்தளிக்கும் கடலாக இருக்கலாம். பயணத்தில் அமைதியும் இருக்கலாம்—ஆபத்துமிருக்கலாம், துன்பமும் துயரமும் நிறைந்துவருவதால் நம் வாழ்க்கை தோல்விபோலத் தோன்றுகிறது. உற்றார் உறவினரும் தக்கநேரத்தில் நம்மைத் தவிக்கவிடுகின்றனர். ஆனால் ஒருவர் மட்டும் எமமைக் கைவிட்டதில்லை. "அஞ்சாதிர்" என்ற அவரது குரல் நம் காதில் என்றுமே எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. இவர் யார்?

இவர்தான் உயிருள்ள கடவுளின் மகன். சாவின் கொடுமையை, சாத்தானின் வல்லமையை, பாவத்தின் தொல்லையை வென்ற வெற்றியின் அரசர். இவரே நமக்கு வாழ்வும் வழியுமாய், உண்மையும் ஒளியுமாய் இருக்கின்றார். இதனால் நமது வாழ்க்கைப் படகு கலங்கரை விளக்காகச் சுடர்வீசும் கிறிஸ்துவை நோக்கிச் செல்லவேண்டும். படகு நேராகச் செல்லுவதற்கு எப்படிச் சுக்கான் உதவி தேவையோ அப்படியே நமது வாழ்க்கையைச் சீராக அமைப்பதற்கு விசுவாசம் அவசியம். 'அவர் வழியாக, அவரோடு, அவரில்' நம் வாழ்க்கையை இணைத்துவிட்டால், அவரே நம்மில் வாழ்கின்றார். அவர் நம்மில் வாழும்போது அவரே நம்மை வழிநடத்துகின்றார். அவரே நமக்குத் துணையாய் இருக்கிறார். அவர்காட்டும் வழியிலே நாம் செல்லும்போது ஒருபோதும் அழிவு நம்மை அணுகாது என்ற திடமான விசுவாசம் நமக்கிருக்கவேண்டும். "என்னை விசுவசிப்பவன் நித்திய வாழ்வைப்பெறுவான்" என்றார் கிறிஸ்து.

—ஜே. என்.

### நன்றித் துதி

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்த வியாகுல மாதா, அர்ச். மிக்கேல் தூதன், சந்தியோகுமையோர், அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டினாலும் எனது பிள்ளைகளுடைய நோய் குணப்பட்டது. இன்னும், பூரண சுகமும், குடும்பத்தில் சமாதானமும், தேவ ஆசீர்வாதமும் கிடைக்கவேண்டுமென்று மன்றாடி நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். அவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

—ஓர் அடியாள்

### தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## சத்தியவேத பாதுகாவலன்

# வங்காள மக்களுக்கு நிவாரணம்

கடந்த சில மாதங்களாக வங்காள தேசமக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் சொல்லுந்தரமன்று. உள்நாட்டுப் போரும் அதனால் ஏற்பட்ட பயங்கரங்களும் போக, அகதிகள் படும் அவஸ்தை, நாட்டின் சீர்குலைந்த நிலை இன்று சம்பந்தப்பட்ட நாட்டினரை மட்டுமல்ல உலக மக்கள் அனைவரையுமே பொறுத்த விஷயமாகி ஐ. நா. சபை இதில் தலையிட்டு நிலைமை மேலும் மோசமாவதைத் தடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் இலட்சக் கணக்கான மக்கள் பசி பட்டினியாலும், பிணியினாலும், சுகாதார வசதிகள் இல்லாமையாலும், வேறு சமூகப் பிரச்சினைகளாலும் அடைந்துவரும் இன்னல்களை கண்கூடாகக் கண்டவர்கள் எடுத்துக் கூறக் கேட்டுள்ளோம். கல்மனதையும் உருகச் செய்யும் இப்பரிதாப நிலையைக் குறித்து இந்திய அரசாங்கமும் ஐ. நா. சபையும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. அகதிகளுக்கு இலவச உணவளிக்கவும், வைத்திய வசதி, தண்ணீர் வசதி செய்யவும், சிறுவருக்கு வகுப்புகள் நடத்தவும் வேறு அத்தியாவசிய சேவைகளைச் செய்யவும் ஐ. நா. சபை அதிகாரிகள் முயற்சிகள் செய்து வருகிறார்கள். இந்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்கவும், இடம் பெயர்ந்து வந்த அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவும் ஏராளமான பொருளுதவி தேவைப்படுகிறது. பல்வேறு நாட்டு அரசாங்கங்களும், வேறு ஸ்தாபனங்களும் தம்மால் ஆன உதவியை இந்த நல்ல காரியத்திற்கு வழங்கி வருகின்றன.

கத்தோலிக்க திருச்சபை என்றும் துன்பப்படுவோரோடு தானும் துன்புறுகின்றது. வங்காள தேசத்து நிகழ்ச்சிகள் குறித்துப் பாப்பரசர் தமது கவலையைப் பன்முறை தெரிவித்துள்ளார். இன்று கத்தோலிக்க மக்கள் பிறருடைய துன்பங்கள் பிரச்சனைகளிலிருந்து தம்மைப் பிரித்து வைக்க முடியாதென்றும், பிறருடைய இடைஞ்சல் இக்கட்டுகளில் கை கொடுத்துதவ வேண்டுமென்றும் திருச்சபை கற்பிக்கிறது. ஆகவே கிழக்குப் பாகிஸ்தான் சம்பவங்கள் எமக்கு வெகு தூரத்திலிருப்பது போல் தோன்றினாலும் அதில் எமக்குக் கடமை இல்லாமற் போகவில்லை. இலட்சக் கணக்கான அகதிகளுக்கு நிவாரணமளிக்க எம்மால் முடியாது போனாலும் எம்மாலான அளவுக்கு எமது பங்கைச் செய்யவேண்டும். அது வங்காள மக்களுக்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படும காரியங்களுக்கு உதவுவதுடன் அம்மக்களுக்கும் திருச்சபைக்குமிடையில் நேய உறவை வளர்ப்பதற்கும் உதவும்.

### பூசை வழிகாட்டி
**ஐப்பசி — 1971.**

24. ஞாயிறு: ஆண்டின் 30-ம் ஞாயிறு [ப]
    1-ம் வாசகம்: சர்வ. 35: 12—14, 16—18.
    2-ம் வாசகம்: 2 திமோ. 4: 6—8, 16—18.
    சுவிசேஷம்: லூக். 18: 9—14.
25. திங்கள்: நாள் பூசை [ப]
    வாசகம்: உரோ. 8: 12—17.
    சுவிசேஷம்: லூக். 13: 10—17.
26. செவ்வாய்: நாள் பூசை [ப]
    வாச. உரோ. 8: 18—25,
    சுவிசேஷம்: லூக். 13: 18—21.
27. புதன்: நாள் பூசை [ப]
    வாசகம்: உரோ. 8: 26—30.
    சுவிசேஷம்: லூக். 13: 22—30.
28. வியாழன்: புனித சீமோன், யூதா [சி]
    வாசகம்: எபேசி 2: 19—22.
    சுவிசேஷம்: லூக். 6: 12—16.
29. வெள்ளி: நாள் பூசை [ப]
    வாசகம்: உரோ. 9: 1—5.
    சுவிசேஷம்: லூக். 14: 1—6.
30. சனி: நாள் பூசை [ப]
    வாசகம்: உரோ. 11: 1—2, 11—12, 25—29. [ப]
    சுவிசேஷம்: லூக். 14: 1—6.

வண. பிதா
**சி. எஸ். ஐயாத்துரை, அ.ம.தி.**
### காலமாயினார்

யாழ். மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. ஐயாத்துரை சுவாமியார் சென்ற 20-ஆம் தேதி புதன்கிழமை மாலை காலமாயினார். அன்னாரது பூதவுடல் யாழ்ப்பாண ஆசனக் கோவில் சேமக்காலையில் மறுநாள் பி. ப. 4-30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. சுவாமியாரின் வாழ்க்கை வரலாறு அடுத்த காவலனில் இடம்பெறும்.

### ஆள்பதிவுச் சட்டம்

வருகிற தைமாதம் நடைமுறைக்குவரும் ஆள் பதிவுச் சட்டத்தின்கீழ் இலங்கையில் வசிக்கும 18 வயதுக்குமேற்பட்டவர்கள் தங்களைப்பதிவு செய்து, தங்களுக்குரிய அடையாளக்காட்டுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தச்சட்டத்தின்கீழ் சுமார் 65 லட்சம்பேர் பதிவு செய்யப்படுவார்கள். அடையாளக் காட்டில் அதற்குரியவரின் புகைப்படமும், பெயரும், விலாசமும் இருக்கும். அவரவர் தங்கள் அடையாளக் காட்டுகளைத் தாங்களே கட்டணஞ் செலுத்திப் பெறவேண்டும். எந்த நேரத்திலும் அடையாளக் காட்டைக் காண்பிக்கக்கூடிய நிலையில் ஒவ்வொருவரும் இருக்கவேண்டும்.

## வருவீர் இறை மக்களே!

—:( வண. F. A. குரூஸ், நாரந்தனை ):—

**பல்லவி**

வருவீர் ஒன்றாய் இறைகுல மக்களே
திருமறை ஓங்க வேண்டிட இன்றே
வருவீர் இறை மக்களே.

**சரணம்**

1
வேதமே காண்போம் கிறிஸ்துவின் வழியாய்
விளங்கிடுமே அவர் தந்தையின் அன்பும்
தந்தையின் வாழ்வு தரணியில் பெறுவோம்
தந்தையின் மைந்தராய் நாமும் இருப்போம்.
—வருவீர் இறைமக்களே

2
உலகினில் விசுவாசம் உயிர்பெற்று வளர
உலகெங்கும் கிறிஸ்துவின் பணியினில் அமர
கிறிஸ்துவின் நற்செய்தி வளமுடன் நிலவ
யாவரும் கடமையில் உழைத்திட வருவீர்.
—வருவீர் இறைமக்களே

3
வழிவரும் உரிமை யாவரும் பகிர
தெரிந்திடும் கருவியாய் நாமுமே இருக்க
நாற்றிசை தேவனின் அழைத்தல்கள் பெருக
நாளுமே ஒன்றாய்ச் செழித்திட வருவீர்.
—வருவீர் இறைமக்களே

4
அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் துலங்க
இறையருள் தேங்கி இன்பத்தில் திளைக்க
இணையில்லாப் பந்தனம் இறைமக்கள் காண
இறைவனை வேண்டி என்றுமே மகிழ்வோம்.
—வருவீர் இறைமக்களே

## மரியாயின் சேனைப் பொன்விழா கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர்

1-ம் பரிசு. செல்வி. லூர்தம்மா மருசலீன், திரு புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம், கரம்பொன், ஊர்காவற்றுறை.
2-ம் பரிசு. செல்வி. மேரி திரேசம்மா பிரூஸ்பிள்ளை, சில்லாலை, பண்டத்தரிப்பு.
3-ம் பரிசு. எஸ். சிறில், 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
4-ம் பரிசு. செல்வி. லில்லி பெல்ஜியா பஸ்ரியாம்பிள்ளை, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
5-ம் பரிசு. திருமதி. மரியபாக்கியம் செபஸ்தியாம்பிள்ளை, 19, டேவிட் றோட், யாழ்ப்பாணம்.
6-ம் பரிசு. செல்வி. மேரி ஞானமலர் சாமிநாதர், சில்லாலை, பண்டத்தரிப்பு.
7-ம் பரிசு. செல்வி. அக்னேஸ் இன்னாசிமுத்து, சில்லாலை, பண்டத்தரிப்பு.
8-ம் பரிசு செல்வி. ஆகத்தம்மா விருசுப்பிள்ளை, சில்லாலை, பண்டத்தரிப்பு.

### பேச்சுப் போட்டி

**இளைஞர்:**

1. செல்வி. றூபினி பிலிப்புப்பிள்ளை, வேதசாட்சிகளின் இராக்கினி பிரசீடியம், கரம்பொன்.
2. செல்வி. தெரிசகுருந்தா அமிர்தநாதர், சற்சகாய மாதா பிரசீடியம், சில்லாலை.
3. செல்வி. மொனிக்கா செல்லத்துரை, எங்கள் சந்தோஷத்தின் காரணம், மானிப்பாய்.

**வளர்ந்தோர்:**

1. செல்வி. டொமெற்றில்டா யோனஸ், சகிரை மாதா பிரசீடியம், சில்லாலை.
2. செல்வி. அக்காஸ் விசியா, இரக்கத்தின் மாதா பிரசீடியம், சந்தியோகுமையோர் கோவில், யாழ்ப்பாணம்.
3. செல்வி. எலிசபேத் குருசுமுத்து, பழுதற்ற கன்னியாயிருக்கிற மாதா பிரசீடியம், மானிப்பாய்.

மோ. தார்சீசியஸ்
செயலர், யாழ். கொமிசியம்

### யாழ் நகரில் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலும் கடந்த ஐம்பது ஆண்டுகளாகச் சேனை அடைந்த வளர்ச்சி, அது ஆற்றிய பணிகள் ஆகியவற்றைச் சித்திரிப்பனவாக இருந்தன. இவற்றுள் மக்கள் கவனத்தை ஈர்க்கும் அம்சமாக இருந்தது யாழ்ப்பாண அன்னம்மாள் கோயிலில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதற் பிரசிடியமாகும். இது தத்ரூபமான சிலைகளால் அமைக்கப்பட்டிருந்தது.

விழாவில் பொருட்காட்சி மட்டும் இடம்பெறவில்லை, பேருரைகள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், படக்காட்சிகள் ஆகியன விழாவுக்கு சோபையைக் கொடுத்தன.

திங்கட்கிழமை மாலை நன்றியறிதற் கூட்டுப் பூசையுடன் விழா முடிவுற்றது.

விழா அமோகமான வெற்றியை அடைந்தது என்று கூறலாம். காட்சிப் பொருள்கள் மிகுந்த சிரத்தை எடுத்து அழகாக அமைக்கப்பட்டிருந்தன. அநேக சௌகரியங்களைப் பொருட்படுத்தாது பெருந்தொகையான மக்கள் காட்சியைக் கண்டுகளித்தனர். இதனாற் சில ஆன்மாக்களாவது தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்து அப்போஸ்தலிக்க சேவையில் ஈடுபட முன்வந்தால் பொருட்காட்சியின் நோக்கம் நிறைவேறியதாகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கத்தோலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்: தொலைபேசி: 300: தாபிதம்: 1876.